**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.** 1 |
| Name | : | **சத்தியா** |
| Father's / Husband Name | : | **வினோத்கண்ணன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 26/2025 |

**தேதி : 03.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நிதி நிறுவனத்தில் கடன் வாங்கும்போது ஆஜர் எதிரி பழக்கமானார். ஆஜர் எதிரி என்னிடம் குடும்ப செலவிற்காகவும் கடனை திரும்ப செலுத்துவதற்காகவும், மாமனாரின் மருத்துவ செலவிற்காகவும், நாத்தனாரின் கணவருக்கு டிராக்டர் கடன் கட்டுவதற்காகவும், எதிரியின் தங்கையின் மருத்துவ செலவிற்காகவும் என்னிடம் பணம் கேட்டார். கடந்த 20.01.2024ம் தேதி துறையூரில் உள்ள கிராம சக்தி தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.29,100/- கடன் வாங்கி எதிரியின் Gpay நம்பருக்கு அன்றைய தினமே அனுப்பிவைத்தேன். 30.01.2024ம் தேதி பாடாலூரில் உள்ள L & T நிதி நிறுவனத்தில் ரூ.45,000/- கடன் வாங்கி எதிரியின் Gpay நம்பருக்கு அன்றைய தினமே அனுப்பிவைத்தேன். 25.02.2024ம் தேதி அன்று துறையூரில் உள்ள Equitos நிதி நிறுவனத்தில் ரூ.39,000/- கடன் வாங்கி எதிரியின் Gpay நம்பருக்கு

அன்றைய தினமே அனுப்பிவைத்தேன். மொத்தமாக ரூ.1,15,000/– எதிரியின் Gpay நம்பருக்கு அனுப்பிவைத்தேன்.

ரூ. 2000/– தவணை தொகை கட்டுவதற்காக ரொக்கமாக எதிரியின் கையில் கொடுத்தேன். அந்த தொகையையும் அவர் தவணைக்கு செலுத்தவில்லை. நா்ன வாங்கிய கடனுக்கான தவணை தொகையை எதிரி கட்டுவதாக சொன்னதால் நான் எதிரிக்கு கடன் வாங்கி கொடுத்தேன். எதிரி 3 அல்லது 4 தவணைகள் கட்டினார், அதன்பிறகு கட்டவில்லை. எதிரி தவணை தொகை கட்டாததால் நிதி நிறுவனத்தில்இருந்து ஆட்கள் என்னுடைய வீட்டிற்கு வந்து தொகையை கட்ட சொல்லி அசிங்கமாக பேசினார்கள். எதிரியை தொடர்பு கொண்டபோது அவருடைய செல்போன் சுவிட்ஜ் ஆப் செய்யப்பட்டிருந்தது. செட்டிக்குளத்திலுள்ள எதிரியினுடைய வீட்டிற்கு சென்றுபார்த்போது வீட்டில் அவர் ்இல்லை. பின்னர் இது சம்மந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலத்திற்கு புகார் கொடுக்க சென்றேன். அங்கு நிறைய பேர் எதிரி ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுக்க வந்திருந்தார்கள்.

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Equitos நிதி நிறுவனத்தில் எனக்கு கொடுத்த உறுப்பினர் புத்தகம் மற்றும் கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ.2 ஆகவும், Union Bank of India செட்டிக்குளம் கிளையின் என்னுடைய 25.02.2024 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ.3 ஆகவும், State Bank of India செட்டிக்குளம் கிளையின் என்னுடைய 20.01.2024 முதல் 30.01.2024 வரையிலான வங்கி கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** கிராம சக்தி நிதி நிறுவனத்தின் உறுப்பினர் அ்ட்டை யின் அசல் எதிரியிடம் உள்ளது. Equitos மற்றும் L&T நிறுவனத்தின் உறுப்பினர் அட்டை அசல் என்னுடைய வீட்டில் உள்ளது. போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் செட்டிக்குளம். என்னுடைய வீட்டிற்கும், எதிரியின் வீட்டிற்கும் 1 கி. மீ தூரம் இருக்கும். நான் 12ம் வகுப்பு படித்திருக்கிறேன். என்னுடைய திருமணத்திலிருந்து எனக்கும், எதிரிக்கும் பழக்கம். இதற்கு முன்பு நான் எதிரிக்கு லோன் வாங்கி கொடுத்ததில்லை. பொதுவாக தனியார் வங்கியில் கடன் வாங்கினால் யார் வாங்கினோர்களோ அவர்கள்தான் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். பைனான்ஸ் நிறுவனத்தினர் எதிரியிடம் பணம் வாங்கி கொள்வதாக சொன்னார்கள். எதிரி என்னிடம் குடும்ப செலவிற்காகவும் கடனை திரும்ப செலுத்துவதற்காகவும், மாமனாரின் மருத்துவ செலவிற்காகவும், நாத்தனாரின் கணவருக்கு டிராக்டர் கடன் கட்டுவதற்காகவும், எதிரியின் தங்கையின் மருத்துவ செலவிற்காகவும் என்னிடம் பணம் கேட்டார். எதிரி பணம் வேண்டுமென்று ஒரே முறை என்னிடம் கேட்டாரா என்றால் பணம் கட்ட போகும்போதெல்லாம் என்னிடம் பணம் கேட்டார்.

நான் மகளிர் சுயஉதவி குழுவில் உறுப்பினராக இல்லை. தனியார் நிறுவனங்களிலிருந்து என்னுடைய ஆவணங்களை கொடுத்துதான் கடன் வாங்கினேன். அதற்கு என்னுடைய கணவர் செக்குரிட்டியாக இருந்தார். எனக்கு Union Bank, State Bank ஆகியவற்றில் வங்கி கணக்கு உள்ளது. எதிரி எங்கள் கிராமத்திற்கு தனியார் நிதி நிறுவனத்திற்கான ஏஜெண்டுகளாகவோ, வேறு வகையில் உதவியாளராகவோ உள்ளாரா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. கிராம சக்தி நிதி நிறுவனத்தில் நான் கடன் வாங்கிய அன்று எதிரி என்னுடன் அந்த வங்கிக்கு வந்திருந்தாரா என்றால் வந்திருந்தார். எதிரி நிதிநிறுவனத்திலிருந்து கடன் தொகையை என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைத்தார்கள். கையில் ரொக்கமாக கொடுக்கவில்லை. கிராம சக்தி வங்கியில் நான் வாங்கியதுதான் முதல் கடன் என்றால் சரிதான்.

Gpay மூலம் எதிரிக்கு பணம் அனுப்பியதற்கான ஆதாரத்தை போலீஸிடம் கொடுத்துள்ளேன். Equitos நிறுவனத்தில் நான் கடன் வாங்கும்போது எதிரி

என்னுடன் வரவில்லை. ரூ.47,000/– கடன் வாங்கியதில் நான் பாதி எதிரி பாதி பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை, முழு தொகையையும் எதிரியிடம்தான் கொடுத்தேன். எதிரிக்கு Gpay செய்ததற்கான நகலை நான் எடுத்துவந்துள்ளேன். **20.01.2024 அன்று எதிரியின் Gpay நம்பருக்கு ரூ.29,100/– அனுப்பியதற்கான பிரிண்ட்அவுட் நகல் அ .சா.ஆ.5 ஆகவும், 30.01.2024 அன்று எதிரியின் Gpay நம்பருக்கு ரூ.45,000/– அனுப்பியதற்கான பிரிண்ட்அவுட் நகல் அ .சா.ஆ.6 ஆகவும், 25.02.2024 அன்று எதிரியின் Gpay நம்பருக்கு ரூ.39,000/– அனுப்பியதற்கான பிரிண்ட்அவுட் நகல் அ .சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

நான் Gpay செய்ததது எதிரி வசந்திக்கு இல்லை என்றால் சரியல்ல. எதிரி வசந்தி வங்கியில் சொன்னால் லோன் கொடுப்பார்கள் என்று ஊரில் சொன்னார்கள். எதிரி என்னிடம் பணம் வாங்கியிருந்தால் மாதம் தவணை தொகையை என்னிடம்தான் கொடுத்திருப்பார் என்றாலும் வங்கியில் கட்டமாட்டார் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு நான் சொல்வதுபோல் எந்த தேவையும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரியிடம் ரூ.2000/– கொடுத்தற்கு நேரடி சாட்சி இருக்கா என்றால் என்னுடைய தந்தை, மற்றும் தாயாருக்கு தெரியும். இதை நான் போலீஸில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் எதிரியிடம் ரூ.2000/– பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்கியதற்காக என்னிடம் புரோநோட் மற்றும் பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் எந்த தொகையும் வாங்கவில்லை என்றாலும், ஊரில் புரளி கிளம்பியதால் நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால்சரியல்ல.

நிதி நிறுவனத்தில் எதிரியிடம் நான் வாங்கிய கடனை கொடுத்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் என்னுடைய தேவைக்குத்தான் நிதி நிறுவனத்தில் கடன் வாங்கினேன்என்றாலும், எதிரியிடம் அந்த பணத்தை கொடுக்கவில்லை என்றாலும், நிதி நிறுவனத்தார் பணத்தை கேட்டதற்கு கட்ட

முடியாததால் எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.